சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 56/2023

பெயர் திரு. நாகராஜன் **நாள்.** 10.06.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்குச் சொத்தை நான் 2009ம் வருடம் கிரயம் பெற்றேன். நான் கிரயம் வாங்கும் பொழுது கிரயதாரர்கள் வாரிசு சான்றிதழ் ஏதும் எனக்கு கொடுக்கவில்லை. கிரயத்தின்பொழுது பட்டா நடராஜன் பெயரில் இருந்தது. பட்டா எண்.219 ஆகும். வா.த.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் பட்டா எண் 409 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நடராஜன், வள்ளி, பூபதி மற்றும் சேகர் ஆகியோர் வீராசாமியின் வாரிசுகள் என்றால் சரிதான். ஆண்டியும், வீராசாமியும் சகோதரர்கள் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1ல் கண்ட 409 பட்டாவை அந்த ஆவணத்துடன் இணைக்கவில்லை. பூர்வீக சொத்து என்பதற்கு பட்டாதான் ஆவணம் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1ல் கண்ட 6வது இன சொத்து என் கிரயதாரர் பெயரில் பட்டா இருந்தது. நான் கிரயம் பெற்ற அனைத்து சொத்துக்களில் 6ம் இன சொத்து மட்டும் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை. எனக்கு கிரயம் கொடுத்த நபர்களுக்கு சொத்துக்கள் வாய் மொழியாக பாகம் கிடைக்கப்பெற்றது.

2. 6வது இன சொத்தை கிரயம் பெறுவதற்கு நடராஜனிடம் கையெழுத்து பெற்றேனா என்றால் அவரை அழைத்ததற்கு அவர் வரவில்லை. வாய் மொழி பாகம் என்பதால் நடராஜனின் வாரிசுகளுக்கு பாகம் உண்டு என்றால் சரிதான். கிரய ஆவணத்தில் நான் வள்ளியிடம் கையெழுத்து பெறவில்லை. எனக்கு கிரயம் கொடுத்த நபர்களுக்கு எவ்வளவு சொத்துக்கள் பாகம் என்றால் 1 ஏக்கர் 19 சென்ட் பாகம். அதில் நான் 60 சென்ட் மட்டும் கிரயம் பெற்றேன்.

3. நான் நடராஜனுக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்களையும் சேர்த்து கிரயம் பெற்றது தவறு என்றால் சரியல்ல. வழக்கு 6வது இன சொத்து 2,3 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். நடராஜனுக்கு பாத்தயப்பட்ட சொத்தை நான் தவறாக கிரயம் பெற்றேன் என்றாலும், அதனால் என் பெயரில் பட்டா மாற்றம் ஏற்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வாய்மொழி பாகம் என்று கூறி நடராஜனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் பட்டா மாற்றம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் வாங்கிய கிரயம் செல்லும் என்றால் சரியல்ல. வாய் மொழி பாகம் படி நடராஜனுக்கு 13 சென்ட் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கான பட்டா, அடங்கல் நான் தாக்கல் செய்யவிலலை. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஒப்புக் கொள்ளப்பட்டது.)

மறுவிசாரணை – இல்லை.